**செய்தி வெளியீடு எண்.549** **நாள்– 27.8.2009**

**செய்தி வெளியீடு**

மைய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் கணிப்புப்படி ஒவ்வொரு ஆண்டும் 2 இலட்சத்திற்கும் அதிகமான நபர்கள் விருந்தோம்பல் பிரிவில் தேவைப்படுகிறார்கள். ஆனால், இந்தப் பிரிவில் தற்சமயம் பயிற்சி பெற்ற நபர்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளனர். பயிற்சி பெற்ற, திறமை வாய்ந்த மனித ஆற்றலை அதிகரிக்கும் பொருட்டு மைய அரசின் சுற்றுலா அமைச்சகம் விருந்தோம்பல் துறையில் அறிவுத்திறன் மேம்படுத்தும் திட்டத்தினை (Skill Development Programme) ஊட்டநெறி நிறுவனங்கள் (Catering Institutes) மூலம் பணி வழங்குபவர்களுக்கான அறிவுத்திறன் ஏற்படுத்தும் திட்டத்தினை (Capacity Building for Service Provider Scheme) வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 8 வது படித்த 18 வயதிலிருந்து 25 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு உணவு உற்பத்தியில் திறனை வளர்த்துக் கொள்ளும் 8 வார பயிற்சியும், உணவு மற்றும் பானம் பரிமாறுதல்–விடுதி அறைகள் பராமரித்தல் ஆகியவற்றில் 6 வார பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது. இந்த பயிற்சி 100 % மைய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் ஆதரவுடன் நடைபெறும் பயிற்சியாகும். இதில் இலவச சீருடை, இலவச சமையல் கருவிகள், இலவச பயிற்சிப் பொருட்கள், இலவச மதிய உணவு ஆகியவற்றுடன் 8 வார கால உணவு சமையற்கலை பயிற்சிக்கு மாதம் ரூ.2000/– உதவித்தொகையும், 6 வார கால உணவு மற்றும் பானம் பரிமாறுதல்–விடுதி அறைகள் பராமரித்தல் பயிற்சிக்கு மாதம் ரூ. 1500/– உதவித்தொகையும் வழங்கப்படும். இந்த பயிற்சி, ஏற்கனவே சென்னை சி.ஐ.டி வளாகம், தரமணியிலுள்ள உணவக மேலாண்மை சமையற்கலை மற்றும் ஊட்ட நெறி தொழில் நுட்பப் பயிலகம் (Institute of Hotel Management Catering Technology and Applied Nutrition) நிறுவனத்தில் தொடங்கப்பட்டுவிட்டது.

தற்போது அனைத்திந்திய வணிகக்கல்வி நிறுவனத்தின் (AICTE) ஒப்புதல் பெற்ற பின்வரும் உணவக மேலாண்மை நிறுவனங்கள் பணி வழங்குபவர்களுக்கான அறிவுத்திறன் ஏற்படுத்தும் திட்டத்தில் (CBSP) கலந்து கொள்ள இசைவளித்துள்ளனர்.

| வரிசை எண். | கல்வி நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1 | எஸ்.ஆர்.எம். இன்ஸ்டியூட் ஆப் ஓட்டல் மேனேஜ்மென்ட், எஸ்.ஆர்.எம் நகர், பெருங்களத்தூர் – 603 203 |

| | |
|---|---|
| | காஞ்சிபுரம் மாவட்டம். |
| 2 | ஏசியன் மெமோரியல் இன்ஸ்டியூட் ஆப் ஓட்டல் மேனேஜ்மெண்ட் அண்டு கேட்டரிங் டெக்னாலஜி, வேளச்சேரி, தாம்பரம் சாலை, ஜலதாம்பேட்டை, சென்னை – 600 100. |
| 3 | எம்பி இன்ஸ்டியூட் ஆப் ஓட்டல் மேனேஜ்மென்ட் அண்டு கேட்டரிங் டெக்னாலஜி,<br>டி–103, அருணா வளாகம்,<br>அண்ணா நகர் (கிழக்கு), சென்னை – 600 102. |
| 4 | செவ்ராய்ஸ் காலேஜ் ஆப் ஓட்டல் மேனேஜ்மெண்ட் அண்டு கேட்டரிங் இன்ஸ்டியூட், செவ்ராய்ஸ் கல்லூரி சாலை,<br>ஏற்காடு – 636 601. |
| 5 | ஸ்டேட் இன்ஸ்டியூட் ஆப் ஓட்டல் மேனேஜ்மென்ட் அண்டு கேட்டரிங் டெக்னாலஜி,<br>துவாக்குடி, திருச்சிராப்பள்ளி – 620 015 |
| 6 | சென்னிஸ் அகாடமி ஆப் டூரிஸம் அண்டு ஓட்டல் மேனேஜ்மென்ட், 2/67 மணிமங்கலம் சாலை, ராம்ஜி நகர்,<br>திருச்சிராப்பள்ளி – 620 009 |
| 7 | பாரத் இன்ஸ்டியூட் ஆப் கேட்டரிங் டெக்னாலஜி அண்டு ஓட்டல் மேனேஜ்மென்ட், திருச்சி சாலை, பாரதி கல்லூரி வளாகம், (புதிய பஸ் நிலையம் அருகில்), தஞ்சாவூர் – 613 005 |
| 8 | அன்னை பாத்திமா இன்ஸ்டியூட் ஆப் கேட்டரிங் அட்மினிஸ்ட்ரேசன்,<br>பாத்திமா நகர், திருமங்கலம், மதுரை மாவட்டம் – – 625 706 |

பயிற்சி வகுப்புகள் தொடங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் சுற்றுப்புறத்திலுள்ள நிறுவனங்களிடம் தங்களுடைய விண்ணப்பத்தினை அடிப்படை குறிப்புகளுடன் (Bio-Data) விண்ணப்பித்தால், பயிற்சி வகுப்புகள் நடைமுறைப்படுத்த ஏதுவாகும்.

\--------

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.